
## திராவிடத்தால் வாழ்கிறோம்

896

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

118




# பி.ஏ.சாமிநாதன்

## கொங்குச் சீமையின் கொள்கைச் சிங்கம்!

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த பி.ஏ.சாமிநாதன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

1967-ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் திருப்புமுனைத் தேர்தல். அதற்குமுன், தமிழ்நாடு முழுவதும் சூறாவளியாகச் சுற்றுப் பயணம் செய்கின்றனர் பேரறிஞர் அண்ணாவும், கழகப் பொருளாளர் கலைஞர் உள்ளிட்ட தலைவர்களும். கோவை மாவட்டத்தில் இடைவிடாது 28 நாட்கள் சுற்றுப்பயணம் செய்ய வைத்து, எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவுக்கு பேரறிஞர் அண்ணாவிடம் 78 ஆயிரம் ரூபாயும், கலைஞரிடம் 48 ஆயிரம் ரூபாயும் தேர்தல் நிதி திரட்டி அளித்தார் அன்றைய ஒருங்கிணைந்த கோவை மாவட்டச் செயலாளர். கோவை கழகத்தினருக்கு ‘புன்செய் புளியம்பட்டி பெரியவர்’ என்றால் தெரியும் . பேரறிஞர் அண்ணாவுடன் ‘கண்ணீர்த்துளி’யாக வெளியேறி, முத்தமிழறிஞரின் உடன்பிறப்பாக நின்ற அந்த முன்னோடி பி.ஏ.சாமிநாதன்.

1975-ஆம் ஆண்டு நெருக்கடி நிலையை எதிர்த்து, மாவட்ட மாநாடுகள் நடத்தி, இறுதியாக டிசம்பர் மாத கடைசியில் கோவையில் ஐந்தாவது மாநில மாநாட்டை நடத்தினார் கழகத் தலைவர் கலைஞர். அந்த மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராகப் பொறுப்பேற்று மிகச் சிறப்பாக நடத்திக்காட்டி கருத்துரிமை வரலாற்றில் இடம்பிடித்தவர். அன்றைய கோவை மாவட்டம், இப்போது கோவை, திருப்பூர், நீலகிரி, ஈரோடு என நான்கு மாவட்டங்களாகப் பிரிந்துள்ளது. அந்தப் பரந்த மண்டலத்துக்கு ஒற்றை மாவட்டச் செயலாளராக இருந்து கழகத்தை வழி நடத்தியவர்.

### இயக்கத் தோழர்களுடன் பயணம்

கோபிசெட்டிப்பாளையம் வட்டத்தில் புன்செய் புளியம்பட்டியில் 1932-ஆம் ஆண்டு ஜனவரியில் பிறந்தவர். பெற்றோர் ஆறுமுகனார் - அரங்கத்தம்மை. கோபியில் பள்ளிக் கல்வி முடித்தவர், கோவை பி.எஸ்.ஜி. கல்லூரியில் இண்டர்மீடியட் முடித்தார். உயர்நிலைப் பள்ளிக் காலத்திலேயே விடுதலை உணர்வும், மொழியுணர்வும் ஆட்கொள்ள, கல்லூரிக் காலத்தில் இயல்பாகவே திராவிட இயக்கத் தோழமைகளுடன் நட்பு கொண்டு செயல்படத் தொடங்கினார்.

திராவிடர் கழகத்தில் இருந்து பிரிந்தபோது, கொங்கு மண்டலத்தின் பல முன்னோடிகளும் கழகத்தின் தொடக்க உறுப்பினர்களாக இருந்தனர். பெத்தாம்பாளையம் பழனிசாமி, கே.ஏ.மதியழகன், உடுமலை நாராயணன், ஈ.வெ.கி.சம்பத், கோவை செழியன், கோவை ராஜமாணிக்கம் உள்ளிட்ட பல மூத்த முன்னோடி களுடன் வெளியேறியவர் சாமிநாதன். அந்த காலகட்டத்தில்தான் கலைஞரும் நாவலரும் கோவையில் இருந்து இயக்கப்பணி செய்து வந்தனர். அதே காலகட்டத்தில் சாமிநாதனுக்கு கூட்டுறவு நெசவு நிறுவனத்தில் அரசுப் பணி கிடைத்தது. ஆனால், கழகப் பணிகளில் ஏற்பட்ட உந்துதல் காரணமாக அரசுப் பணியிலிருந்து விலகினார்.

1958-வாக்கில் புன்செய் புளியம் பட்டி ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தார். அப்போது நடைபெற்ற ஒன்றியப் பெருந்தலைவர் தேர்தலின் போது இவர்மீது கொலை முயற்சித் தாக்குதல் நடைபெற்றது. கோபியில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் முதன்முதலில் கழகத்தின் சார்பில் 2 உறுப்பினர்கள் வெற்றி பெற்றனர். அப்போதும் கொலைமுயற்சித் தாக்குதலுக்கு ஆளானார். அந்தத் தாக்குதல்களுக்கு ஈடாக 1983-ஆம் ஆண்டில் கோபியில் 13 வார்டுகளிலும் கழகத்தை வெற்றிபெற வைத்தார் சாமிநாதன்.

### அண்ணா – கலைஞர் தந்த குடிநீர் திட்டங்கள்

1963-ஆம் ஆண்டு கூடலூர் வண்டிப் பேட்டைக் கூட்டத்துக்கு வந்த பேரறிஞர் அண்ணாவும், கலைஞரும் சாமிநாதன் வீட்டுக்கு வந்துள்ளனர். அப்போது அவர் வீட்டில் நிலவிய குடிநீர் தட்டுப்பாட்டை அறிந்துதான், ஊரில் நிலவும் குடிநீர் தட்டுப் பாட்டை அறிந்து கொண்டனர். அப்போது முடிவு செய்ததுதான், கழகம் ஆட்சியில் அமர்ந்தால் புன்செய் புளியம்பட்டியின் குடிநீர் பஞ்சத்தைத் தீர்க்க வேண்டும் என்பது. அதுபோலவே அண்ணா முதல்வராகப் பொறுப்பேற்றதும் புளியம்பட்டி குடிநீர் திட்டத்தைக் கொண்டு வந்தார். கலைஞரின் ஆட்சிக்காலத்தில் இரண்டாவது குடிநீர் திட்டமும் கொண்டுவரப்பட்டு, புஞ்சையாக இருந்த ஊர் நன்செய்யாக மாறியது.

கோபி நாடாளுமன்றத் தொகுதியில் இரு முறை போட்டியிட்டு, ஒருமுறை சி.சுப்பிர மணியம் அவர்களையும் மற்றொருமுறை ஈ.வி.கே.சம்பத் அவர்களையும் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தவர். 1967-ஆம் ஆண்டு முதன்முதலில் இவர் தேர்தலில் போட்டியிட்டபோது, கழகக் கொடியைக் கட்டமுடியாத அளவுக்குப் போட்டி இருந்துள்ளது. ஏனெனில், அந்தப் போட்டியில் அவர் எதிர்கொண்ட வேட்பாளர் சி.சுப்பிரமணியம். காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர். ஒவ்வொரு கிராமத்திலும் காங்கிரஸ் செல்வாக்கு. அதை எதிர்த்து, தனது பிரச்சார வலிமையால் வெற்றிபெற்றவர் சாமிநாதன்.

> **‘பாரபட்சமற்ற ஜனநாயகவாதி’ என கலைஞர் நினைவுகூர்ந்தார். கழகமே குடும்பம் என வாழ்ந்து மறைந்த பி.ஏ.சாமிநாதன், கோபி கழக வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்பார்.**

ஈ.வெ.கி. சம்பத் கழகத்தில் இருந்தபோது அவரது தலைமையில்தான், சாமிநாதன் திருமணம் நடைபெற்றது. பின்னர் 1971-ஆம் ஆண்டு தேர்தலின்போது கோபி தொகுதியில் ஈ.வெ.கி. சம்பத்தை எதிர்த்துப் போட்டியிடும் நிலை உருவானது. அப்போதும் பெரும் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார். இவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோதுதான், வரட்டுப்பள்ளம் அணைத் திட்டம், சத்தி தொகுதியில் குண்டேரிப்பட்டு அணைத்திட்டம், கோபியில் ஈரோட்டில் கல்லூரிகள், விண்ணப்பள்ளி மருத்துவமனை ஆகியவற்றை கலைஞரிடம் உரிமையோடு கேட்டுப் பெற்றார்.

கோவை மாவட்டத்தின் முதல் மாவட்டச் செயலாளராக விளங்கிய உடுமலை நாராயணன் அவர்களோடு அரசியல் பயணம் செய்த சாமிநாதன், 1971-ஆம் ஆண்டு அவர் மறைவுக்குப் பின்னர் மாவட்டச் செயலாளராகப் பொறுப்புக்கு வந்தார்.

### கோவை மாநில மாநாடு

1975-இல் அவர் கோவை மாவட்டச் செயலாளராக இருந்தபோதுதான், இந்தியாவே திரும்பிப் பார்த்த கழகத்தின் மாநில மாநாடு நடைபெற்றது. அவர்தான் வரவேற்புக்குழு தலைவர். மாநாடு நடந்து கொண்டிருக்கும்போதே அவரைக் கைது செய்வதற்கான முயற்சிகள் நடந்தன. என்றாலும், மாநாட்டினை வெற்றிகரமாக நடத்தி, தலைவரின் பாராட்டைப் பெற்றார். அந்த மாநாட்டுக்குப் பின்னர் கோவையில் ‘பெரியவர்’ என்கிற அளவில் மக்களிடமும் கழகத்தினரிடமும் அளவிலா அன்பைப் பெற்றார் சாமிநாதன். அப்போது அவர் கைது செய்யப்படவில்லை என்றாலும், கழக ஆட்சி கலைக்கப்பட்ட பின்னர், நாடாளுமன்றத்துக்குச் சென்ற அவர் கைது செய்யப்பட்டு, தமிழ்நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

சிறையில் அடைக்கப்பட்டிருந்த கழகத் தோழர்கள் மு.ராமநாதன், மு.கண்ணப்பன் உள்ளிட்டோருக்கு ஆறுதல் சாமிநாதன் அவர்களின் உரையாடல்தான். ‘அவரது உரை பல அரிய தகவல்களைக் கொண்டிருக்கும்’ என மு.கண்ணப்பன் தனது நினைவுக் குறிப்புகளில் சொல்கிறார். குறிப்பாக, அவருடன் சிறையில் இருந்த 50 பேரின் குடும்பங்களுக்கு சாமிநாதன் துணைவியார் சம்பூர்ணம் அவர்கள் பக்கபலமாக இருந்ததை கலைஞரே பாராட்டி இருக்கிறார். கோவை சிறையில் கிடைக்கும் தகவல்களை, சென்னை வந்து தலைவரிடத்தில் சேர்ப்பது, தலைவரின் பேச்சுகளை சிறைக்கு எழுதிக் கொண்டு செல்வது, என சம்பூர்ணம் அவர்களின் உழைப்பும் கழகத்துக்கானது. 2022-ஆம் ஆண்டு முப்பெரும் விழாவில் சம்பூர்ணம் அம்மையாருக்கு, ‘பெரியார் விருது’ வழங்கி பெருமை செய்தது கழகம். அது சம்பூர்ணம் அம்மையாருக்கு மட்டுமான மரியாதை மட்டு மல்ல; சாமிநாதன் அவர்களின் அப்பழுக் கற்ற அரசியலுக்கும் கழகம் சேர்த்த பெருமை.

1996-ஆம் ஆண்டு ஊராட்சித் தேர்தலில் கூட்டணிக் கட்சி வேட்பாளருக்கு வாக்கு சேகரிக்கச் சென்ற சாமிநாதன், வாகனத்தில் இருந்து தவறி விழுந்து இடுப்பு எலும்பு முறிந்த நிலையில் ஓய்வெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன்பின்னர் தேறி வந்தாலும், முன்போல அவரால் வேகத்துடன் இயங்க முடியவில்லை. 2011-ஆம் ஆண்டு ஜனவரி 22-ஆம் தேதி இயற்கை எய்தினார். இறப்பில் எந்த வித சடங்குகளும் இல்லாமல், கழகக் கொடி போர்த்தப்பட்டு கொண்டு செல்லப்பட்டார். கோவை மாவட்டமே திரண்டது. கோபி நகரத்து மக்கள் ‘பெரியவருக்கு’ பெரு மரியாதையுடன் விடையளித்தனர். ‘பாரபட்சமற்ற ஜனநாயகவாதி’ என கலைஞர் நினைவு கூர்ந்தார். கழகமே குடும்பம் என வாழ்ந்து மறைந்த பி.ஏ.சாமிநாதன், கோபி கழக வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்பார்.

...துடிக்கும்

## வெறுப்பின் கொற்றம் வீழ்க!
## அன்பே, அறமென மொழிக!



“வெறுப்பின் கொற்றம் வீழ்க! அன்பே அறமென மொழிக!” என்கிற முழக்கத்துடன் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம், தனது பொன்விழா ஆண்டு நிறைவு விழா நிகழ்வினை நடத்துகிறது.

12.07.2025, சனிக்கிழமை (இன்று) காலை 8.30 மணி முதல் இரவு 7.00 மணி வரை, சென்னை தியாகராய நகர், சர் பிட்டி தியாகராயர் அரங்கில், முழு நாள் நிகழ்வாக நடைபெறுகிறது. இந்த ஒருநாள் நிகழ்வில் ஏராளமான கலை அமர்வுகள், இசை நிகழ்ச்சிகள், கருத்து அமர்வுகள், புத்தகக் காட்சி ஆகியவை நடைபெறவுள்ளன.

குறிப்பாக, ‘தற்கால தமிழ்ச் சமூகத்தில் சமூகநீதியின் நிலை’, என்கிற தலைப்பில் வழக்கறிஞர் அருள்மொழி, ‘கருத்துரிமையும் புண்படுதலும்’ என்கிற தலைப்பில், எழுத்தாளர் பெருமாள் முருகன், ‘தனித்துவமும் பன்மைத்துவமும்’ என்கிற தலைப்பில் கர்நாடக இசைக்கலைஞர் டி.எம்.கிருஷ்ணா, ‘மொழியின் அரசியல்’ என்கிற தலைப்பில் மொழியியல் ஆய்வாளர் கணேஷ் நாராயண் தேவி உள்பட பலர் உரையாற்ற உள்ளனர். நிறைவுரையாக கழகத்தின் துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபி அவர்களும் உரையாற்றவுள்ளனர்.

1975-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த சங்கம், தமிழ்நாட்டின் முற்போக்கு இலக்கிய வரலாற்றில் அழுத்தமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. நெருக்கடி நிலை காலத்தில் அதை எதிர்த்து உருவான இந்த சங்கம், பல்வேறு காலகட்டங்களில் கருத்துச் சுதந்திரத்துக்காக களத்தில் நின்றுள்ளது. இன்று, வெறுப்பைக் கக்கும் அரசியலுக்கு எதிராக, சமத்துவ அரசியலைப் பேசுவோர் ஓர்மையாக த.மு.எ.க.ச.-வின் இந்த நிகழ்வும் துணை செய்கிறது.

## ஃப்ளாஷ்பேக்



### கலைஞர் நடத்தி வைத்த எங்கள் குடும்ப மணவிழா!



கே.ஏ.ராஜீவ் காந்தி

எனது தாத்தா எம்.கே.சிவலிங்கம் அவர்கள் பள்ளிப்பட்டு ஒன்றிய கழக முன்னோடி. பள்ளிப்பட்டு ஒன்றிய செயலாளர் மற்றும் பொதுக்குழு உறுப்பினராகவும் இருந்தார். இந்தப் புகைப்படம் 1966-ஆம் ஆண்டு அவரது மகளின் (எனது சித்தி) சுயமரியாதைத் திருமணம், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையில் மிக பிரம்மாண்டமாக நடத்தப்பட்டது. இந்த திருமணத்தின் அழைப்பாளர்களாக, செங்கல்பட்டு மாவட்டச் செயலாளர் சி.வி.எம்.அண்ணாமலை, மதுராந்தகம் ஆறுமுகம், காஞ்சிபுரம் கே.டி.மணி, மத்தூர் எஸ்.கே.ஆறுமுகம் ஆகிய கழக மூத்த முன்னோடிகள் வருகை தந்து உரையாற்றினர். தலைவர் கலைஞர் அவர்கள் நடத்தி வைத்த இந்தத் திருமண நிகழ்வு குறித்து எங்கள் கிராமத்தில் இன்றுவரை பலர் பேசிக்கொண்டு இருப்பார்கள். எங்கள் குடும்பத்தாரின் மனதில் என்றும் மறக்க முடியாத நிகழ்வாக இந்த திருமணம் திகழ்கிறது.

**– கே.ஏ.ராஜீவ் காந்தி,**
**இளைஞர் அணி பாக பொறுப்பாளர், திருவள்ளூர் மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### தடைசெய்தாலும் பிரச்சாரம்!

27.8.50 அன்று தி.மு.க. செயற்குழுக் கூட்டம் கோவில்பட்டியில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானம் கழகத்தினர் எழுதிய தடை செய்யப்பட்ட நூல்களைப் பரப்ப வேண்டும் என்பது. “சர்க்காரால் தடை செய்யப்பட்டும், எழுதியது குற்றம் என்று தீர்மானிக்கப்பட்டு இருக்கும் புத்தகங்களில் உள்ள கருத்துகளைத் துண்டுப் பிரசுரங்கள், கையெழுத்துப் பிரதிகள் மூலம், நாட்டிலே பரப்பும் திட்டத்தைச் செயற்குழு அங்கீகரிப்பதுடன், இந்தத் திட்டத்திற்கான அணியை அமைக்க, செயலாளருக்கு அனுமதி அளிக்கிறது” எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131